RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025

# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்

சிவகங்கை | மலர்-4 | இதழ்- 152 | ஜூன்.7, 2025 சனிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5







# பக்ரீத் பண்டிகை: முதல்வர் ஸ்டாலின், தமிழக அரசியல் கட்சித் தலைவர்கள் வாழ்த்து

சென்னை: ஜூன்.7-

பக்ரீத் பண்டிகை இஸ்லாமியர்களால் இன்று (ஜூன் 7) உற்சாகமாகக் கொண்டாடப்பட உள்ளது. இந்நிலையில், பக்ரீத் பண்டிகையையொட்டி, தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் உள்ளிட்ட அரசியல் கட்சித் தலைவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

முதல்வர் ஸ்டாலின்: "தியாகத்தையும், பகிர்ந்துண்ணும் பண்பையும் போற்றும் பக்ரீத் திருநாளைக் கொண்டாடிடும் இஸ்லாமிய சகோதரர்கள் அனைவருக்கும் எனது நெஞ்சார்ந்த வாழ்த்துகள். இஸ்லாமியர்களின் இருபெரும் திருநாள்களில் ஒன்று பக்ரீத். புத்தாடை உடுத்தி, உணவினை வறியவர்க்கு ஒரு பகுதியையும், நண்பர்களுக்கு ஒரு பகுதியையும் பகிர்ந்தளித்துக் கொண்டாடும் பெருநாள்.

இஸ்லாமிய மக்களுக்காக இட ஒதுக்கீடு, கல்வி உதவித்தொகை, நங்கநல்லூரில் ஹஜ் இல்லம் என அவர்களின் சமூக கல்வி ஸ்ரீ பொருளாதார மேம்பாடு மற்றும் உரிமைகளுக்காகத் தொடர்ந்து பணியாற்றும் சகோதர உணர்வோடு அனைத்து இஸ்லாமிய சகோதர, சகோதரிகளுக்கும் எனது அன்பான பக்ரீத் நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்." என்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் குறிப்பிட்டுள்ளார்.



இபிஎஸ்: அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், "தியாகத்தைப் போற்றும் புனிதத் திருநாளாம் பக்ரீத் திருநாளை இறையணர்வுடன் கொண்டாடி மகிழும் அன்பிற்கினிய இஸ்லாமியப் பெருமக்கள் அனைவருக்கும் எனது உளங்கனிந்த 'பக்ரீத்' திருநாள் நல்வாழ்த்துகளை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இஸ்லாமியப் பெருமக்கள் மகிழ்ச்சியோடு கொண்டாடும் இந்த இனிய திருநாளில் எல்லோரிடமும் இறை உணர்வும், தியாகச் சிந்தனையும், சகோதரத்துவமும் மலரட்டும்; அது மனிதகுல நல்வாழ்விற்கு மகோன்னதமாய் வழிகோலட்டும் என்று மனதார வாழ்த்தி, இஸ்லாமிய சகோதர, சகோதரிகள் அனைவருக்கும், எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா ஆகியோரது நல்வழியில், எனது பக்ரீத் திருநாள் வாழ்த்துகளை மீண்டும் ஒருமுறை உரித்தாக்கிக்கொள்கிறேன்." எனக் குறிப்பிட்டுள்ளார்.

செல்வப்பெருந்தகை: தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவர், "தியாகம், ஈகை, இரக்கம் மனித வாழ்வின் உயரிய அடிப்படை பண்புகள். இவை அனைத்தும் பரப்பப்படும் புனித திருநாள் இந்த பக்ரீத். வலியும், பாசமும், சமர்ப்பணமும் கலந்து பொங்கும் ஆன்மீகத் தூய்மை கொண்ட நமது சக முஸ்லிம் சகோதரர்களின் பெரும் பண்டிகை.

இந்த நாள், ஏழைஎளியோரிடம் ஈரமான இதயத்தையும், ஆதரவற்றோரிடம் ஒரு சிந்திய நம்பிக்கையையும்,, எதிரிகளிடையே கூட ஒரு இனிய புரிதலையும் உண்டாகட்டும். இணக்கமே இஸ்லாமின் இயல்பு. சமத்துவமே காங்கிரசின் சாரம். இரண்டும் சேர்ந்தால்தான் இந்தியா என்றும் நிறைவேறும். மனிதம் வாழட்டும், வேற்றுமை ஒழியட்டும், ஒற்றுமை ஓங்கட்டும்.

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி மத, மொழி, இன வேறுபாடுகளைத் தாண்டி ஒற்றுமையை வலியுறுத்தும் போராளியாக என்றும் திகழ்ந்து வருகிறது. முஸ்லிம் சகோதர, சகோதரிகள் அனைவருக்கும் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி சார்பில் பக்ரீத் வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்." என்று தனது வாழ்த்தை பதிவு செய்துள்ளார்.

ராமதாஸ்: "இஸ்லாமியர்களின் தியாகத்தையும், கொடைத்தன்மையையும் போற்றும் பக்ரீத் திருநாளை கொண்டாடும் இஸ்லாமிய சகோதர சகோதரிகள் அனைவருக்கும் எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

பக்ரீத் தியாகத்தை மட்டுமின்றி ஈகை, மனித நேயம், நல்லுறவு, சகோதர தத்துவம், பிற சமூகங்களை நேசித்தல், அங்கம் குறைபாடுகள் உள்ளவர்கள் மீதான அன்பு செலுத்துதல் உள்ளிட்டவைகள் அடங்கும். பக்ரித் திருநாள் சொல்லும் செய்தியை புரிந்து கொள்ள வேண்டியவர்கள் புரிந்து கொள்ளாதது தான் உலகம் முழுவதும் இன்று நிலவும் அனைத்து மோதல்களுக்கும், வீழ்ச்சிகளுக்கும் காரணமாக உள்ளது.

பக்ரீத் திருநாள் சொல்லும் பாடத்தை புரிந்து கொண்டால், உலகில் எங்கும் வெறுப்பு, மோதல், வன்முறை நிலவாது. மாறாக எங்கும் அன்பு சகோதரத்துவம், அமைதி நல்லிணக்கம் ஆகியவை மட்டுமே தழைத்தோங்கும்." என்று பாமக நிறுவனர் ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

அன்புமணி ராமதாஸ்: பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், "தியாகத்தை போற்றுவதற்கான பக்ரீத் திருநாளை கொண்டாடும் உலகம் முழுவதுமுள்ள இஸ்லாமிய சகோதர, சகோதரிகள் அனைவருக்கும் இதயங்கனிந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். பக்ரீத் சொல்லும் பாடம் இஸ்லாமியர்களுக்கு மட்டுமானது அல்ல.

உலகில் அனைவரும் கடைபிடிக்க வேண்டிய பாடம் அதுவாகும். அந்த பாடத்தை அனைவரும் பின்பற்ற வேண்டும்; உலகம் முழுவதும் உலகில் அன்பு, அமைதி, சகோதரத்துவம், நல்லிணக்கம், மகிழ்ச்சி, வளம் உள்ளிட்டவை செழிக்க வேண்டும் என்று கூறி மீண்டும் ஒருமுறை பக்ரீத் திருநாள் வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்." என்று குறிப்பிட்டுள்ளார்.

டிடிவி தினகரன்: "தியாகத்தை போற்றும் புனிதத் திருநாளாம் பக்ரீத் திருநாளை கொண்டாடி மகிழும் இஸ்லாமிய பெருமக்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நல்வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கிறேன்.

இறைவனின் விருப்பத்திற்கு கீழ்படிந்து நடப்பதே வாழ்க்கையின் உண்மையான நெறி என்பதை உலகிற்கு பறைசாற்றும் இந்நாளில் ஏழை, எளியோருக்கு உதவி செய்தல், தவறிழைப்போரை மன்னித்தல், பகமையை நீக்குதல், தானம் தர்மம் செய்தல் போன்ற திருக்குரானின் உயரிய போதனைகளை பின்பற்றி, ஒற்றுமையோடும், சகோதரத்துவத்தோடும் வாழ்ந்திட நாம் அனைவரும் உறுதியேற்போம்." என்று அமமுக பொதுச் செயலாளர் டிடிவி தினகரன் வாழ்த்தியுள்ளார்.



## மாநிலங்களவைத் தேர்தல்:
# இபிஎஸ் முன்னிலையில் அதிமுக வேட்பாளர்கள் வேட்புமனு தாக்கல்

சென்னை: ஜூன்.7-

மாநிலங்களவைத் தேர்தலில் அதிமுக சார்பில் போட்டியிடும் ஐ.எஸ்.இன்பதுரை மற்றும் ம.தனபால் ஆகியோர் தங்களது வேட்புமனுக்களை கட்சியின் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி முன்னிலையில் இன்று (ஜூன் 6) தாக்கல் செய்தனர்.

தமிழகத்தில் இருந்து மாநிலங்களவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட திமுக மாநிலங்களவை எம்பிக்கள் எம்.சண்முகம், முகமது அப்துல்லா, பி.வில்சன், பாமக எம்பி அன்புமணி, அதிமுக எம்பி சந்திரசேகரன், மதிமுக எம்பி வைகோ ஆகியோரின் பதவிக் காலம் ஜூலை 24ம் தேதியுடன் நிறைவடைகிறது. இந்தச் சூழலில் தமிழகத்தில் இருந்து 6 புதிய மாநிலங்களவை உறுப்பினர்களை தேர்வு செய்ய ஜூன் 19ம் தேதி தேர்தல் நடைபெறும் என்று தலைமை தேர்தல் ஆணையம் அண்மையில் அறிவித்திருந்தது. இதற்கான வேட்புமனுத் தாக்கல் ஜூன் 2ம் தேதி தொடங்கியது.

மாநிலங்களவை உறுப்பினர் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகத்தில் சார்பில் போட்டியிடும் நான்கு இடங்களில், மூன்று இடங்கள் திமுக வேட்பாளர்களுக்கும், ஏற்கெனவே செய்துகொண்ட ஒப்பந்தத்தின்படி மக்கள் நீதி மய்யத்துக்கு ஒரு இடமும் ஒதுக்கப்பட்டிருந்தது. அதிமுக சார்பில் செங்கல்பட்டு கிழக்கு மாவட்ட அவைத் தலைவர் ம.தனபால், அதிமுக வழக்கறிஞர் பிரிவு செயலாளர் ஐ.எஸ்.இன்பதுரை போட்டியிடுவார்கள் என்று அறிவித்திருந்தது.

அதன்படி, தலைமைச் செயலகத்தில் இன்று (ஜூன் 6) அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி முன்னிலையில், ஐ.எஸ். இன்பதுரை மற்றும் ம.தனபால் ஆகியோர் தங்களது வேட்புமனுவை தாக்கல் செய்தனர். அப்போது, அதிமுக முன்னாள் அமைச்சர்கள் கே.பி.முனுசாமி, நத்தம் விசுவநாதன், செங்கோட்டையன், திண்டுக்கல் சீனிவாசன், எஸ்.வேலுமணி ஆகியோர் உடனிருந்தனர்.

மாநிலங்களவைத் தேர்தலுக்கான வேட்பு மனுக்களை தாக்கல் செய்ய ஜூன் 9ம் தேதி கடைசி நாளாகும். ஜூன் 10ம் தேதி வேட்பு மனுக்கள் பரிசீலனை செய்யப்படும். வேட்பு மனுக்களை வாபஸ் பெற ஜூன் 12ம் தேதி கடைசி நாள் ஆகும். ஒருவேளை போட்டி இருந்தால் ஜூன் 19ம் தேதி காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை வாக்குப் பதிவு நடைபெறும். அன்றைய தினம் மாலை வாக்குகள் எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படும் என்று தலைமை தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

# "பாகிஸ்தான் போன்றது ராகுல் காந்தியின் நாக்கு!" மத்திய அமைச்சர் கிரிராஜ் சிங் விமர்சனம்



பாட்னா: ஜூன்.7-

"மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தியின் வார்த்தைகள், பாகிஸ்தானின் வார்த்தைகளை ஒத்திருக்கிறது. அவர் தேசத்தை மதிக்கவில்லை" மத்திய அமைச்சர் கிரிராஜ் சிங் குற்றம்சாட்டியுள்ளார்.

இது குறித்து செய்தியாளர்களிடம் பேசிய கிரிராஜ் சிங், "ராகுல் காந்தி இந்தியாவின் வீரத்தை எதிர்த்தார். அவர் ராணுவத்தின் துணிச்சல் குறித்து கேள்வி எழுப்பினார். மேலும், உலகளவில் இந்திய ராணுவத்தின் நற்பெயருக்குக் களங்கம் விளைவித்தார். பிஹார் பொதுமக்கள் அவரை எதிர்ப்பார்கள், ராணுவத்தையோ அல்லது தேசத்தையோ மதிக்காத ஒருவருக்கு அவர்கள் ஏன் வாக்களிக்க வேண்டும்? ராகுல் காந்தியின் நாக்கு, பாகிஸ்தான் போன்றது. அவர் தேசத்தை மதிக்கவில்லை.

இப்போது பிரதமர் மோடி அவமதிக்கப்படவில்லை. 1971ல் ராணுவம் வென்றதா அல்லது இந்திரா காந்தி ஜெயித்தாரா? ஜெயித்தது ராணுவம்தான். அப்போது வாஜ்பாய் எதிர்க்கட்சியில் இருந்தார். அவர், "இப்போது பாரதம் மட்டுமே இருக்கிறது, வேறு எந்த கட்சியும் இல்லை" என்றார். இந்த பயனற்ற நபர் (ராகுல் காந்தி) நாட்டின் துணிச்சலையும் ராணுவத்தையும் கேலி செய்கிறார். அப்படிப்பட்ட ஒருவரை புறக்கணிக்க வேண்டும்" என்று கூறினார்.

மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி இன்று பிஹாரில் உள்ள கயா விமான நிலையத்துக்கு வந்தார். அவர் காங்கிரஸின் 'அரசியலமைப்பு மாநாட்டில்' உரையாற்றவும், இன்னும் பல நிகழ்ச்சிகளில் பங்கேற்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இதனிடையே, ராகுல் காந்தி தர்பங்காவுக்குச் சென்று மாணவர்களுடன் கலந்துரையாடினார். சாதி கணக்கெடுப்பு மற்றும் இடஒதுக்கீடு போன்ற பிரச்சினைகள் குறித்து விவாதித்தார். மாணவர்களிடம் சமூக நீதியின் முக்கியத்துவத்தை வலியுறுத்திய அவர், அரசின் கொள்கைகளையும் விமர்சித்தார். சாதிவாரி கணக்கெடுப்பின் அவசியத்தை எடுத்துக்காட்டி, பிரதமர் நரேந்திர மோடி பொதுமக்களின் அழுத்தம் காரணமாக அதை அறிவிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது என்று கூறினார்.

# "மனோஜ் சின்ஹா பதவி உயர்வு பெற்றுவிட்டார், ஆனால் நான்..." மோடி மேடையில் உமர் அப்துல்லா ஆதங்கம்

ஸ்ரீநகர்: ஜூன்.7-

"மனோஜ் சின்ஹா பதவி உயர்வு பெற்றுவிட்டார். ஆனால், நான் பதவி இறக்கம் செய்யப்பட்டதாக உணர்கிறேன்" என்று பிரதமர் நரேந்திர மோடி முன்னிலையில் ஜம்மு காஷ்மீர் யூனியன் பிரதேச முதல்வர் உமர் அப்துல்லா தனது கவலையை தெரிவித்துள்ளார். காஷ்மீருக்கு மாநில அந்தஸ்தை வலியுறுத்தும் வகையில் அவர் இவ்வாறு பேசியுள்ளார்.

ஜம்மு காஷ்மீரின் ரியாசி மாவட்டத்தில் செனாப் ஆற்றின் குறுக்கே 1,315 மீட்டர் நீளத்துக்கு அமைக்கப்பட்டுள்ள உலகின் மிக உயரமான ரயில்வே இரும்பு வளைவுப் பாலத்தை பிரதமர் நரேந்திர மோடி இன்று திறந்து வைத்தார். அவருடன் துணை நிலை ஆளுநர் மனோஜ் சின்ஹா, முதல்வர் உமர் அப்துல்லா, ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ், மத்திய அமைச்சர் ஜிதேந்திர சிங் உள்ளிட்டோர் உடனிருந்தனர். இதனைத் தொடர்ந்து செனாப் நதியின் கிளை நதியான ஆஞ்சி ஆற்றின் குறுக்கே, கட்டப்பட்டுள்ள நாட்டின் முதல் கேபிள் ரயில் பாலத்தையும் பிரதமர் மோடி திறந்து வைத்தார்.



பின்னர், இப்பாலங்கள் வழியாக இயக்கப்படும் வந்தே பாரத் ரயிலை பிரதமர் மோடி கொடி அசைத்து தொடங்கிவைத்தார். ஜம்மு காஷ்மீரின் கத்ராவிற்கும் ஸ்ரீநகருக்கும் இடையே இந்த வந்தே பாரத் ரயில் இயக்கப்படுகிறது. ஜம்மு காஷ்மீரின் இந்த முக்கிய திட்டங்கள் தொடங்கிவைக்கப்பட்டதை அடுத்து தலைவர்கள் உரையாற்றும் நிகழ்ச்சி கத்ராவில் நடைபெற்றது.

பிரதமர், துணைநிலை ஆளுநர், மத்திய அமைச்சர்கள் முன்னிலையில் உரையாற்றிய உமர் அப்துல்லா, "இந்த ரயில் சேவை ஜம்மு காஷ்மீரின் நீண்ட கால கனவு. இத்திட்டத்தை நிறைவேற்ற பலர் கனவு கண்டார்கள். ஆங்கிலேயர்கள்கூட கனவு கண்டார்கள். ஜீலம் நதியின் குறுக்கே யூரி வரை ரயில் பாதையை கொண்டு வந்து காஷ்மீரை நாட்டின் பிற பகுதிகளுடன் இணைக்க வேண்டும் என்று அவர்கள் கனவு கண்டார்கள், ஆனால் அவர்களால் அந்தக் கனவை நிறைவேற்ற முடியவில்லை.

இந்த சந்தர்ப்பத்தில், முன்னாள் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாயியை நான் குறிப்பிட்டு நன்றி சொல்லாவிட்டால் அது தவறாகிவிடும். இந்தத் திட்டத்துக்கு அடிக்கல் நாட்டப்பட்டபோது நான் 8ஆம் வகுப்பு படித்துக்கொண்டிருந்தேன். இப்போது எனக்கு 55 வயது. இறுதியில் இந்தப் பாலம் திறக்கப்பட்டுவிட்டது. இந்த திட்டத்துக்கு அடல் பிஹாரி வாஜ்பாய், 'தேசிய முக்கியத்துவம் வாய்ந்த திட்டம்' என்ற அந்தஸ்தை வழங்கி பட்ஜெட்டை அதிகரித்தால்தான் இது நடந்தது. இது ஜம்மு காஷ்மீர் மக்களுக்கு எல்லா வகையிலும் பெரிதும் பயனளிக்கும்.

ஆங்கிலேயர்களால் கூட சாதிக்க முடியாதது உங்கள் கைகளால் (பிரதமர் மோடி) நிறைவேறியுள்ளது. ஜம்மு காஷ்மீர், காஷ்மீர் பள்ளத்தாக்கு, இப்போது நாட்டின் பிற பகுதிகளுடன் இணைக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் ஜம்மு காஷ்மீருக்கு பெரிதும் பயனளிக்கும். இது இணைப்பை மேம்படுத்தி சுற்றுலாவை அதிகரிக்கும், உள்ளூர்வாசிகளுக்கு பயனளிக்கும்.

ஜம்மு காஷ்மீரில் மேற்கொள்ளப்பட்ட அனைத்து ரயில்வே திட்டங்களிலும் பிரதமருடன் நானும் இருந்து வருகிறேன். இது எனக்கு கிடைத்த அதிர்ஷ்டம். முதலாவதாக, அனந்த்நாக் ரயில் நிலையம் திறக்கப்பட்டபோதும் நான் உடன் இருந்தேன். இரண்டாவதாக, பனிஹால் ரயில் சுரங்கப்பாதை திறக்கப்பட்டபோதும் நான் உடன் இருந்தேன். 2014ஆம் ஆண்டு கத்ரா ரயில் நிலையம் திறக்கப்பட்டபோது இதே நான்கு பேர் இங்கு இருந்தனர்.

அப்போதைய ரயில்வே இணை அமைச்சர் மனோஜ் சின்ஹா, ஜம்மு காஷ்மீர் மாநிலத்தின் துணைநிலை ஆளுநராக பதவி பதவி உயர்வு பெற்றார். ஆனால், நான் ஒரு மாநில முதல்வராக இருந்து, தற்போது ஒரு யூனியன் பிரதேசத்தின் முதல்வராக பதவி இறக்கம் செய்யப்பட்டதாக உணர்கிறேன். ஆனால், இது சரிசெய்யப்பட அதிக நேரம் எடுக்காது என்று நான் நம்புகிறேன். உங்கள் கைகள் மூலம், ஜம்மு காஷ்மீர் மீண்டும் ஒரு மாநிலமாக அதன் நிலையை மீண்டும் பெறும்" என தெரிவித்தார்.



# குடியாத்தம் பெரிய ஏரியில் இறைச்சிக்கழிவுகள் அழுகிய மூட்டைகள் துர்நாற்றம்

வேலூர், ஜுன்.07

வேலூர் மாவட்டம் குடியாத்தம் போர்ணாம்பட்டு சாலை ஓரம் சுமார் 400 ஏக்கர் பரப்பளவில் 101 மில்லியன் கன அடி கொள்ளளவு நெல்லூர் பேட்டை பெரிய ஏரி நீர்வளத்துறைக்கு சொந்தமானது இந்த ஏரிக்கு மோர்தானாவில் இருந்து கால்வாய் வழியாக ஏரிக்கு தண்ணீர் வருகிறது இந்த ஏரியில் நீர் நிரம்பி இதன் மூலம் சுற்றியுள்ள அதைச் சுற்றியுள்ள ஊர்களுக்கு பயன்படுத்தப்படுகிறது இதனிடையே குடியாத்தம் நகர பகுதி உள்ள நெல்லூர் பேட்டை சந்தை பேட்டை மோதின் பேட்டை பல இடங்களில் செயல்படும் இறைச்சிக்கடைகளில் இருந்து அதன் கழிவுகளை இரவு நேரங்களில் ஆட்டோ இருசக்கர வாகன மூலம் இறைச்சி கழிவுகளை மூட்டை கட்டி கொண்டு வந்து ஏரியில் கொட்டி விட்டு செல்கின்றனர் இந்த மூட்டையில் உள்ள கழிவுகள் அழுகிய துர்நாற்றம் வீசுகிறது இதனால் ஏரி மாசடைந்து சுகாதார சீர்கேட்டை ஏற்படுத்தி வருகிறது இதனால் அப்பகுதியில் நடைபயிற்சி வாகனத்தில் செல்பவர்களுக்கு துர்நாற்றம் தாங்க முடியாமல் மூக்கை கரங்களால் முட்டிக்கொண்டு கடந்து செல்லும் அவல நிலைக்கு ஆளாகி வருகின்றனர் எனவே நீர்வளத்துறை அதிகாரிகள் இரவு நேரங்களில் கொண்டு வந்து கழிவுகளை கொட்டும் கடைக்காரர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது அனைவரின் எதிர்பார்ப்பாக உள்ளது.

# உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு ஸ்ரீ நாராயணி பள்ளிகள் சார்பில் 5,000 மரக்கன்றுகள் வழங்கும் மாபெரும் விழிப்புணர்வு நிகழ்ச்சி!





வேலூர், ஜுன்.07

வேலூரில் ஸ்ரீபுரம் ஸ்ரீ சக்தி அம்மாவின் தெய்வீக அருளால், ஸ்ரீ நாராயணி பள்ளிகள் சார்பில் உலக சுற்றுச்சூழல் நாள் 2025ஆம் ஆண்டு ஜூன் 5ஆம் தேதி சிறப்பாக கொண்டாடப்பட்டது.

காலை 10.00 மணி முதல் 12.00 மணி வரை, வேலூர் கிரீன் சர்க்கிள், அணைக்கட்டு, ஆரணி மற்றும் கண்ணமங்கலம் பகுதிகளில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியின் போது, 5,000 மரக்கன்றுகள் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டன. சுற்றுச்சூழல் பாதுகாப்பை முன்னெடுக்கும் விதத்திலும் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதத்திலும், "பூமியின் வளம் அனைவரின் தேவைக்கும், என்ற உயரிய கருத்து பொது மக்களிடம் எடுத்துச் சொல்லப்பட்டது.".

இந்நிகழ்ச்சிக்கு ஸ்ரீபுரம் இயக்குநரும் ஸ்ரீ நாராயணி பள்ளிகளின் தாளாளருமான டாக்டர் எம்.சுரேஷ்பாபு , தலைமை வகித்தார். அணைக்கட்டு பகுதியில் நடந்த நிகழ்ச்சியில் அணைக்கட்டு சட்டமன்ற உறுப்பினர் ஏ.பி.நந்தகுமார் கலந்து கொண்டு மரக்கன்றுகளை மக்களுக்கு வழங்கி விழாவினை உற்சாகத்துடன் துவங்கி வைத்தார்.

அதனை தொடர்ந்து, வேலூர் கிரீன் சர்க்கிள் பகுதியில், வேலூர் துணை காவல்துறை கண்காணிப்பாளரான பிரித்விராஜ் சவுகான், தென்னிந்திய பத்திரிகையாளர் சங்கத்தின் மாவட்ட தலைவரும், செய்தி ஆசிரியர் மற்றும் சமூக ஆர்வலருமான டாக்டர்.ராஜ்பாபு ஆகியோர் கலந்து கொண்டு பொது மக்களுக்கு மரக்கன்றுகளை வழங்கி விழாவினை துவக்கி வைத்தனர்.

மாணவர்கள் உற்சாகமாக பொதுமக்களுக்கு மரக்கன்றுகளை வழங்கி. பிளாஸ்டிக் தவிர்ப்பு மற்றும் பசுமை வாழ்வு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தினர்.

மேலும், வேலூர் மாவட்டத்திலுள்ள ஆரணி மற்றும் கண்ணமங்கலம் ஆகிய இடங்களிலும் தலா 50 மாணவர்கள் பங்கேற்று 1,000 மரக்கன்றுகளை பொது மக்களுக்கு வழங்கினர்.

நிகழ்ச்சியில் பள்ளி முதல்வர்கள், துணை முதல்வர்கள், நிர்வாக அலுவலர், மற்றும் ஆசிரியர்கள் உள்ளிட்ட அனைவரும் மாணவர்களுடன் இணைந்து ஆர்வத்துடன் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# திருப்பூர் மாவட்டத்தில் பிற்படுத்தப்பட்டோர்/ மிகப்பிற்படுத்தப்பட்டோர்/ சீர்மரபினர் மாணவர் மற்றும் மாணவியர்களுக்கென செயல்பட்டு வரும் விடுதியில் சேர்ந்து பயனடையலாம்

திருப்பூர், ஜூன்.7-

தமிழ்நாடு அரசால் திருப்பூர் மாவட்டத்தில் பிற்படுத்தப்பட்டோர்/ மிகப்பிற்படுத்தப்பட்டோர்/ சீர்மரபினர் மாணவர் மற்றும் மாணவியர்களுக்கென கீழ்க்கண்டவாறு மொத்தம் 19 விடுதிகள் செயல்பட்டு வருகின்றன.

வ.எண் விடுதிகளின் விவரம் மாணவர்களுக்கானது மாணவிகளுக்கானது

1 பள்ளி விடுதிகள் 8 6

2 கல்லூரி விடுதிகள் 3 2

2) பள்ளி விடுதிகளில் 4 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயில்கின்ற மாணவர் / மாணவியர்களும் கல்லூரி விடுதிகளில் பட்டப்படிப்பு, பட்ட மேற்படிப்பு, ஐ.டி.ஐ மற்றும் பாலிடெக்னிக் படிப்புகளில் பயிலும் மாணவ/மாணவியர் சேர்ந்து பயனடையலாம்.

3) விடுதிகளில் எவ்வித செலவினமும் இல்லாமல் பின்வரும் சலுகைகள் வழங்கப்படுகின்றன.

- அனைத்து விடுதி மாணவ/ மாணவியருக்கு மூன்று வேளை உணவு மற்றும் தங்கும் வசதியும் அளிக்கப்படும்.
- 10 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ,மாணவியருக்கு 4 இணை சீருடைகள் தைத்து வழங்கப்படும்.
- 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு பயிலும் மாணவ/ மாணவியர்களின் கல்வித் திறனை மேம்படுத்தும் பொருட்டு NEET/ JEE நுழைவுத்தேர்வுக்கான வினா வங்கி நூல்கள்,சிறப்பு வழிகாட்டிகள் மற்றும் வினா வங்கி நூல்கள் வழங்கப்படும்.
- கல்லூரி விடுதிகளில் முதலாம் ஆண்டு தங்கிப் பயிலும் மாணவ/மாணவியருக்கு ஜமக்காளமும் , பள்ளி விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ/ மாணவியருக்கு ஆண்டுந்தோறும் பாய்களும் வழங்கப்படும்.
- பள்ளி / கல்லூரி விடுதிகளில் தங்கிப் பயிலும் அனைத்து மாணவ/ மாணவியர்களுக்கும் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை போர்வைகள் வழங்கப்படும்.
- மலைப்பிரதேசங்களில் இயங்கும் விடுதிகளில் கம்பளி மேலாடைகள் வழங்கப்படும்.

4) விடுதிகளில் சேருவதற்கான தகுதிகள்

- பெற்றோர்/ பாதுகாவலரது ஆண்டு வருமானம் ரூ.2,00,000/க்கு மிகாமல் இருக்க வேண்டும்.
- இருப்பிடத்திலிருந்து பயிலும் கல்வி நிலையத்தின் தொலைவு குறைந்தபட்சம் 8 கி.மீக்கு மேல் இருக்க வேண்டும். இந்த தூர விதி மாணவியருக்கு பொருந்தாது.

5) தகுதியுடைய மாணவ/மாணவியர் விண்ணப்பங்களை சம்பந்தப்பட்ட விடுதி காப்பாளர்/காப்பாளினிகளிடமிருந்தோ அல்லது மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் உள்ள மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகத்திலிருந்தோ இலவசமாக பெற்றுக்கொள்ளலாம்.

6) பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் பள்ளி விடுதிகளை பொறுத்த வரை சம்பந்தப்பட்ட விடுதி காப்பாளர், காப்பாளினியிடம் அல்லது மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகத்தில் 18.06.2025 ஊக்குள்ளும் , கல்லூரி விடுதிகளை பொறுத்த வரை சம்பந்தப்பட்ட விடுதி காப்பாளர் , காப்பாளினியிடம் அல்லது மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகத்தில் 15.07.2025 ஊக்குள்ளும் சமர்பிக்க வேண்டும். மாணவ, மாணவியர்கள் விண்ணப்பிக்கும் பொழுது சாதி மற்றும் பெற்றோரது ஆண்டு வருமானம் குறித்த சான்றிதழ்கள் ஏதும் அளிக்கத் தேவையில்லை. விடுதியில் சேரும் போது மட்டும் இச்சான்றிதழ்களை அளித்தால் போதுமானது.

7) தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு விடுதியிலும் முகாம் வாழ் இலங்கைத் தமிழர்களின் குழந்தைகளுக்கென தனியே 5 இடங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

எனவே பள்ளி/ கல்லூரிகளில் பயிலும் தேவைப்படும் மாணவ / மாணவியர்கள் அரசின் இச்சலுகைகளைப் பெற்று பயனடையுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.தா.கிறிஸ்துராஜ் இ.ஆ.ப அவர்கள் தெரிவித்துள்ளார்.



■ செங்கல்பட்டு மாவட்டம் பல்லாவரம் அடுத்த பம்மல் தெற்கு பகுதி 10 வது வார்டு திமுக சார்பில் மறைந்த முன்னாள் முதலமைச்சர் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்தநாள் விழா மற்றும் மாணவர்களுக்கு நலதிட்ட உதவி வழங்கும் விழா தாம்பரம் மாநகராட்சி 10 வது வார்டு மாமன்ற உறுப்பினர் மதினாபேகம் தலைமையில் வட்டகழக செயலாளர் முகமது அப்பாஸ் முன்னிலையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு சிறப்பு அழைப்பாளராக பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி மற்றும் மணடல குழுத் தலைசரும், தெற்கு பகுதி செயலாளருமான வே.கருணாநிதி கலந்து கொண்டு கழககொடியேற்றி இனிப்புகள் வழங்கியும், 10 ஆம் வகுப்பு பொதுதேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்ற மாணவ, மாணவிகளுக்கு ஊக்க தொகை வழங்கியும் இதனை தொடர்ந்து ஏழை எளிய மக்கள் 300 க்கும் மேற்பட்டோருக்கு அறுஞ்சுவை பிரியாணி வழங்கி வெகு விமர்சியாக கொண்டாடினர். இந்நிகழ்ச்சிக்கு 10 வது வார்டு பகுதி நிர்வாகிகள் மற்றும் மகளிரணி உட்பட ஏராளமனோர் கலந்து கொண்டனர்.

# ஆக்சிலோ ஃபின்சர்வ் அறிமுகப்படுத்தும் 'இந்தியாஎட்' பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் எட்டெக் நிறுவனங்களுக்கு வட்டியில்லா கல்வி கட்டண நிதியுதவி வழங்குகிறது

திருச்சி, ஜூன்.7

இந்தியாவின் கல்வியை நோக்கமாகக் கொண்ட வங்கி சாரா நிதி நிறுவனமாகிய ஆக்சிலோ ஃபின்சர்வ், 'இந்தியாஎட்' எனும் வட்டியில்லா பள்ளி மற்றும் தனிப்பயிற்சிக் கட்டண நிதி உதவித் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. கல்விக்கான நிதி உதவியின் முறையை மறுவடிவமைக்கும் நோக்கில் உருவாக்கப்பட்ட இந்தியாஎட் திட்டம், மாணவர்களும் கல்வி நிறுவனங்களும் எதிர்கொள்ளும் நிதிசார்ந்த சவால்களைத் தீர்க்கும்.

பள்ளிகள், கல்லூரிகள், கல்விப் பயிற்சி மையங்கள் மற்றும் எட்டெக் வழங்கு நிறுவனங்களுக்கு உகந்த நிதியுதவித் தீர்வுகளை வழங்குகிறோம்' என்கிறார் ஆக்சிலோ ஃபின்சர்வின் உள்ளூர் கடன்கள் துறையின் முதன்மை வணிக அதிகாரி ஆனந்த் சுப்பிரமணியம்.



இந்தியாவின் தனியார் கல்விச் சந்தை தற்போது $52 பில்லியனாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது, டிஜிட்டல் மற்றும் தனிப்பயன் கற்றல் முறைகளின் விரைவான பரவலுடன் இதன் ஆண்டு வளர்ச்சி 12% சிஏஜிஆர் ஆகும். ஆக்சிலோவின் இந்தியாஎட், வளரும் தேவையை நெகிழ்வு மற்றும் வேகத்துடன் சேவையை வழங்கத் தயாராக உள்ளது. நிறுவனத்தின் வலுவான டிஜிட்டல் உள்கட்டமைப்பும் அண்மை முதலீடும் உதவியாக உள்ளன.

இந்தியாஎட் – நிறுவன கூட்டாண்மை மாதிரியின் முக்கிய அம்சங்கள் :

கல்விக்கான முழுமையான செலவுகளையும் உள்ளடக்கும்: பள்ளிக் கட்டணம், இளநிலை/ முதுநிலை கல்விக் கட்டணங்கள், போட்டித் தேர்வுக்கான பயிற்சி, திறன்

நெகிழ்வான கடன் தொகைகள்: ரூ 20,000 முதல் ரூ 10,00,000 வரை கட்டணங்கள்

பணம் திருப்பிச் செலுத்தும் காலக்கெடுகள்: 3 மாதங்கள் முதல் 72 மாதங்கள் (6 ஆண்டுகள்) வரை

ஆன்லைன் செயல்முறை: முழுமையான டிஜிட்டல் மற்றும் காகிதமில்லாச் செய்முறை

காத்திருக்க வேண்டிய அவசியமில்லா பூஜ்ய காலம் : கூட்டாண்மைக் கல்வி நிறுவனங்களுக்கு உடனடி நிதி வழங்கல்; நிகழ் நேர நிதி ஆதரவிற்கான உறுதிப்பாடு

செயலாக்கம் முடிந்த ஒப்புதலுக்குப்பின் 24 மணி நேரத்துக்குள் ஆக்சிலோ நிறுவனம் அந்த நிதியை நேரடியாகக் கூட்டாண்மை நிறுவனங்களுக்கு அனுப்பும்.

'இந்தியாவின் கல்வி சூழல் பெரும் மாற்றத்தை எதிர்கொண்டு வருகிறது. உயரும் கல்விக் கட்டணங்கள் மற்றும் ஆன்லைன் கற்றல், தனிப்பயிற்சி மற்றும் பாடத் திட்டம் சாரா கூடுதல் பாடங்கள் போன்ற விரிவாகும் தேவைகளைப் பொருத்து, குடும்பங்கள் புத்திசாலித்தனமான நிதி விருப்பங்களை நாடுகின்றன. "இந்தியஎட்" தேவையுள்ள நேரத்தில், தடையில்லா, வட்டியில்லா நிதி உதவியினை வழங்குவதன் மூலம், மாணவர்களும் கல்வி வழங்குநர்களும் பயன்பெறுவார்கள்' என மேலும் தொடர்ந்தார் ஆனந்த் சுப்பிரமணியம்.

அடுத்து, இந்த சேவையின் இரண்டாம் கட்டத்தில், மாணவர்கள் அல்லது தனிப்பட்ட கடனாளிகள், பள்ளிக் கல்வி, திறன் மேம்பாட்டு மற்றும் தொழில்துறை பயிற்சிக்கான கடன்களுக்கு நேரடியாக விண்ணப்பிக்க முடியும் என ஆக்சிலோ விரைவில் அறிவிக்க உள்ளது.

இந்த முதலீடுகள், இந்தியாவின் அடுத்த தலைமுறை கற்றலாளர்களுக்காகச் சேவை வழங்கும் இந்தியாஎட் போன்ற நிறுவனங்களின் புதிய முயற்சிகளை ஆதரிக்கின்றன.

# ஊழல் அதிகரித்து வருவதால் 2026 ல் தமிழகத்தில் ஆட்சி மாற்றம் வரும்

வேலூர் ஜுன்.07

வேலூர் மாவட்டம், குடியாத்தம் விஜய் மாணவர்களுக்கு பாராட்டி விழா எடுப்பதையும் பெண் பிள்ளைகளை கொச்சைப்படுத்தி பேசிய வேல்முருகனை வன்மையாக கண்டிக்கிறேன். திமுகவில் பொறுப்பு கொடுத்தவுடன் கமலஹாசன் மாற்று மொழிகளை பற்றி பேசியது கண்டிக்கத்தக்கது சுயலாபத்திற்காக கமல்ஹாசன் மொழி அரசியல் செய்கிறார். கூட்டணி கட்சியினர் என்ன பேசினாலும் என்ன தவறு செய்தாலும் திமுக கண்டிப்பதில்லை

ஊழல் அதிகரித்து வருவதால் 2026 ல் தமிழகத்தில் ஆட்சி மாற்றம் வரும்

டாஸ்மார்க்கிலும் திமுக பெயில் ஆகிவிட்டது

குடியாத்தத்தில் பாஜக மூத்த தலைவர் டாக்டர் தமிழிசை சௌந்தர்ராஜன் பேட்டி

வேலூர் மாவட்டம் குடியாத்தம் ரோட்டரி சங்கத்தில் நடைபெற்ற ராணி அகல்யா பாய் ஹோல்கர் அவர்களின் 300 வது பிறந்தநாள் முன்னிட்டு சார்பாக நடைபெற்ற கருத்தரங்கில் சிறப்பு அழைப்பாளராக பாஜக மூத்த தலைவர் டாக்டர் தமிழிசை சௌந்தரராஜன் கலந்து கொண்டு கருத்தரங்கை குத்து விளக்கேற்றி துவக்கி வைத்து சிறப்புரை ஆற்றினார்

பின்னர் செய்தியாளர்களிடம் டாக்டர் தமிழிசை சௌந்தரராஜன் கூறுகையில்

சகோதரர் விஜய் ஒரு நிகழ்ச்சி நடத்தி பொது தேர்வில் அதிக மதிப்பெண் வாங்குபவர்களை ஊக்குவிக்கிறார் அதை வேல்முருகன் அவர்கள் பெண் பிள்ளைகளை கொச்சைப்படுத்தியும் பெண் குழந்தைகளின் உணர்வுகளை புண்படுத்துவதும் அவர்களின் ஒழுக்கத்தை தவறாக சித்தரிப்பதும் வேல்முருகினால் நடத்தப்பட்டுள்ளது என்பது கொஞ்சம் கூட ஒப்புக் கொள்ள முடியாத ஒன்று அதை வன்மையாக கண்டிக்கிறேன்



எங்களுக்கும் விஜய்க்கும் பல மாற்றுக் கருத்துக்கள் இருக்கலாம் ஆனால் மாணவிகள் அவரை அண்ணா என்று அழைப்பதை வேல்முருகன் கொச்சைப்படுத்தி பேசி இருப்பது கண்டனத்துக்குரியது

கமலஹாசன் ஏதோ பெரிய தியாகி போல தமிழுக்கே அவர்தான் காப்பாளன் போல் திராவிட முன்னேற்ற கழகம் கூட்டணி கட்சியினை முன்னிறுத்துகிறார்கள் தமிழுக்கு நாங்களும் ஆதரவாளர்கள் தான் ஆனால் மற்ற மொழி பேசுபவர்கள் புண்படக் கூடாது என்பதுதான் எங்கள் நோக்கம் தமிழர்களும் அதைத்தான் நினைக்கிறார்கள் தமிழ் மொழி தாய் போன்றது இந்த தாய் மற்ற மொழிகளை புண்படுத்துவதை விரும்ப மாட்டாள் இவர்கள் மற்றவர்கள் புண்படுத்தியுள்ளனர்

நீங்கள் உங்கள் சுயலாபத்திற்காக உங்கள் படம் ஓட வேண்டும் என்பதற்காக திமுக உங்களுக்கு ராஜ சபா சீட் கொடுத்து விட்டார்கள் என்பதற்காக மீண்டும் மொழி அரசியல் செய்து இளைஞர்களை தவறாக வழிநடத்த வேண்டாம் என கேட்டுக்கொள்கிறேன்

இன்னும் அண்ணா பல்கலைக்கழக விவகாரத்தில் முழுமையான தீர்வு கிடைக்கவில்லை மத்திய அரசு தீவிரவாதத்திற்கு எதிராக உலகாயமே வியக்கும் அளவில் போர் நடத்தி இருக்கிறார் அதில் பொதுமக்கள் யாரும் பாதிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது உலகத்திற்கே பிரதமர் வழிகாட்டியாக உள்ளார் என்று உலக நாடுகள் பாராட்டியுள்ளது எதற்கு எடுத்தாலும் ஸ்டாலின் மத்திய அரசை குறை சொல்கிறார் ஆனால் ஒரு மாற்றுக் கட்சி எம்பி உலக நாடுகளுக்கு அனுப்பி இந்தியாவைப் பற்றி பேச வைத்தவர் மோடி அதை மிக சரியாக செய்தார் கனிமொழி அவருக்கும் எனது பாராட்டுக்கள்

அவர்கள் நடத்திய பொதுக்குழுவில் ஆப்ரேஷன் சிந்தூர் பற்றி ஒரு பேச்சும் இல்லை என்பது ஆச்சரியமாக உள்ளது எல்லாவற்றிலும் ஸ்டாலின்குறை சொல்லாதீர்கள் மத்திய அரசோடு இணக்கமாக5 உள்ள கேரளா முதலமைச்சர் பல்வேறு நலத்திட்டங்களை மாநிலத்திற்கு பெற்றுள்ளார் மத்திய அரசுடன் எப்பொழுதும் மோதல் போக்கை கொண்டு தமிழகத்தை புறக்கணிக்கிறார் மதுரைக்கு அமைச்சர் வருகிறார் அமித்ஷா வருவது எங்களுக்கு எல்லாம் மகிழ்ச்சியாக உள்ளது

பாமக நிறுவனர் ராமதாஸ் அவர்களை ஆடிட்டர் குருமூர்த்தி சைதை துரைசாமி அவர்களும் சந்திப்பது ஒரு ஆரோக்கியமான சூழ்நிலை ஒரு சமூக நீதித்திக்காக ஆரம்பிக்கப்பட்ட ஒரு கட்சி உள்ளே சில பிரச்சனைகளும் இதனால் அந்த கட்சி பாதிக்க கூடாது என்ற அவர்கள் போய் பேசி இருக்கிறார்கள் குழப்பமான சூழ்நிலையில் இருந்து மீண்டு வரவேண்டும் வேண்டும் என்பதே எனது ஆவல்

டாஸ்மார்க்கில் தான் திமுக பாஸ்மார்க் வாங்குறது என்று நான் சொல்வேன் இப்போது டாஸ்மாக்கிலுன் திமுக பைல் மார்க் வாங்கிவிட்டது அதிலும் ஊழல் அதிகரித்துவிட்டது

கல்லூரிகளில் மட்டுமல்ல மருத்துவமனையில் கூட மருத்துவர்கள் குறைபாடு உள்ளது எல்லாவற்றிலும் பற்றாக்குறையாக உள்ளது குறிப்பாக காவல்துறையில் பற்றாக்குறையாக உள்ளது

பெங்களூரில் நடைபெற்ற சம்பவம் வருத்தமளிக்கிறது இவர்கள் கும்ப மேலாவை குறை சொன்னார்கள் 45 கோடி மக்கள் கூடினார்கள் நேற்று பெங்களூரில் எந்தவிதமான முன்னேற்பாடுகளும் செய்யாமல் அவசர அவசரமாக வெற்றி விழாவை கொண்டாடினார்கள் அது மிகவும் தவறானது திமுக கூட்டணியில் உள்ள கட்சிகளின் மாநிலங்களில் என்ன நடந்தாலும் திமுக கண்டுகொள்ளாது வரும் 2026 ஆம் ஆண்டு தமிழகத்தில் ஆட்சி மாற்றம் வரும் எல்லா துறைகளிலும் ஊழல் அதிகரித்து விட்டது என கூறினார்..



## குடியாத்தம் புதிய நீதிக் கட்சியின் நகர செயலாளரும், கைத்தறி காவலனுமான ரமேஷ் இல்லத் திருமண விழாவின் தொடர்ச்சியாக வரவேற்பு விழா

வேலூர், ஜுன்.07

வேலூர் மாவட்டம், குடியாத்தம் தாலுகா, பிச்சனூர் பேட்டை, குடியாத்தம் புதிய நீதிக் கட்சியின் நகர செயலாளரும், கைத்தறி காவலனுமான ரமேஷ் இல்லத் திருமண விழாவின் தொடர்ச்சியாக வரவேற்பு விழா, குடியாத்தம் நகர செயலாளர் கைத்தறி காவலனுமான எஸ்.ரமேஷ் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக புதிய நீதிக் கட்சியின் நிறுவனத் தலைவர், ஏ.சி.எஸ் குழுமம், நெசவாளர்களின் பாதுகாவலர் கொடைவள்ளல் டாக்டர். ஏ.சி.சண்முகம் எக்ஸ். எம்.பி. எக்ஸ் எம்.எல்.ஏ.வின் நல்லாசியுடன், புதிய நீதிக் கட்சியின செயல் தலைவர் ஏ.ரவிக்குமார், துணை பொதுச்செயலாளர் ஏ.சி.எஸ் அருண்குமார் ஆகியோர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர். இதில் சிறப்பு விருந்தினர்களாக புதிய நீதிக் கட்சியின் மண்டல செயலாளர் சரவணன், மாவட்ட செயலாளர் செந்தில், நகர ஏ.சி.எஸ் பேரவை செயலாளர் சசிகுமார், நகரப் பொறுப்பாளர்கள் வெங்கடேசன், கன்னியப்பன், ஹரிஷ் குமார், எஸ்.பி.நந்தகுமார், வினோத் குமார், மோகன், சிவகுமார், விஜய், மகளிர் அணியினர் உமா மகேஸ்வரி, சங்கீதா, நித்யா, கல்பனா மற்றும் பொறுப்பாளர்கள், உறுப்பினர்கள் என திரளானோர் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்.





## அருள்மிகு சிவ ஆஞ்சநேயர் குடமுழுக்கு விழா நடைபெற்றது

காரைக்குடி, ஜூன்.07

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி அருகே வ.சூரக்குடி அருள்மிகு சிவ ஆஞ்சநேயர் திருக்கோவில் மகா கும்பாபிஷேக விழா வெகு சிறப்பாக நடைபெற்றது. முன்னதாக 03.06.2025 அன்று முதல் நான்கு கால பூஜையுடன் அதி விமர்சையாக துவங்கிய யாகசாலை ,05.06.25 அன்று காலை பரவை சித்தர் அவர்களின் சிஷ்யன் நத்தம் ரஞ்சன் சித்தர் அவர்கள் தலைமையில் மகா கும்பாபிஷேகம் வெகு சிறப்பாக நடைபெற்றது. இக்கும்பாபிஷேக விழாவில் செட்டிநாடு கிரிவல குழு தலைவரும், தினத்தந்தி ஜோதிடரும் தந்தி டிவி புகழ் சிவல்புரி சிங்காரம் மற்றும் திருப்பத்தூர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கே கே உமாதேவன் ஆகியோர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு சிறப்பித்தனர். இக் கும்பாபிஷேக விழாவினை சுற்றுவட்டார பொதுமக்கள் மற்றும் பக்தர்கள் பெருமளவில் கலந்து கொண்டு கண்டுகளித்தனர். கும்பாபிஷேக வர்ணனை ஆசிரியர் ஜெயங்கொண்டான் சிறப்பாக வர்ணனை செய்தார். இதனைத் தொடர்ந்து பக்தர்கள் அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது. இம்மாபெரும் கும்பாபிஷேக விழாவிற்கான ஏற்பாட்டினை அருள்மிகு ஸ்ரீ சிவ ஆஞ்சநேயர் கோயில் நிறுவனரும், தலைவருமாகிய முத்துராமன் செல்வி, மாரிமுத்து குடும்பத்தார்கள் வெகு சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர்.

## கரூர் அமராவதி மற்றும் காவிரி ஆறுகளில்இரவு நேரங்களில் சட்ட விரோதமாக மணல் கடத்தியவர்கள் கைது : லாரி பறிமுதல்





திருச்சி: ஜூன்.7-

கரூர் அமராவதி மற்றும் காவிரி ஆறுகளில்இரவு நேரங்களில் சட்ட விரோதமாக மணல் அள்ளி கடத்துவதாக,திருச்சி சரக டிஐஜி வருண் குமார் அவர்களுக்கு ரகசிய தகவல் கிடைத்தது அதன் அடிப்படையில் அந்த கும்பலை பிடிக்க டிஐஜி ஸ்பெஷல் டீம் எஸ் ஐ வினோத் குமார் குழுவினர் சென்றனர்,அமராவதிஆறு பகுதிகளில் ரகசியமாக கண்காணிப்பு பணியில் ஈடுபட்டனர்,அப்போதுநேற்று அதிகாலை லாரியில் மணல் அள்ளிக்கொண்டிருந்த அவர்களை கையும் களவுமாக பிடித்தனர்,இதில் 12டிப்பர் , 14லாரிகள், பறிமுதல் செய்தனர்

## தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் சாமிநாதன் அங்கன்வாடி மையத்தில் குழந்தைகளுக்கு வண்ணச்சீருடைகளை வழங்கினார்

திருப்பூர், ஜூன்.7-

திருப்பூர் மாவட்டம் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் உடுமலைப்பேட்டை வருவாய் கோட்டாட்சியர் திரு.குமார் அவர்கள் தலைமையில், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் திரு.க.ஈஸ்வரசாமி அவர்கள் முன்னிலையில் இன்று (05.06.2025) திருப்பூர் மாவட்டம், குடிமங்கலம் ஊராட்சி ஒன்றியம், சோமவாரப்பட்டி அங்கன்வாடி மையத்தில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப்பணிகள் திட்டத்தின் கீழ் அங்கன்வாடி மைய குழந்தைகளுக்கு வண்ணச்சீருடைகளை வழங்கினார்கள்.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழக மக்கள் முன்னேற்றத்திற்காக பல்வேறு திட்டங்களை அறிவித்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். குறிப்பாக சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் சார்பில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட பணிகளின் கீழ் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டப் பணிகளின் கீழ் திருப்பூர் மாவட்டத்தில்14 வட்டாரங்களில் 1472 அங்கன்வாடி மையங்கள் செயல்பட்டு வருகின்றது. இவ்வற்றில் கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்கள், பிறந்தது முதல் 6 வயது வரையுள்ள குழந்தைகள் மற்றும் வளர் இளம் பெண்களின் ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்த தமிழ்நாடு அரசு பல திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.'

தேசிய ஊட்டச்சத்து குழுமத்தின் கீழ் போஷான் அபியான் திட்டத்தில் ஊட்டச்சத்தை உறுதி செய் 2.0 திட்டத்திம் மூலம் ஊட்டச்சத்து குறைபாடில்லா நிலை எய்துதல் என்னும் உயரிய கருத்தோடு கடுமையான ஊட்டச்சத்து குறைபாடு உள்ள குழந்தைகளுக்கு இரண்டு ஊட்டச்சத்து பெட்டகம் மற்றும் மிதமான ஊட்டச்சத்து குறைபாடு உள்ள குழந்தைகளுக்கு ஒரு ஊட்டச்சத்து பெட்டகம் வழங்கப்படுகிறது.

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் மூலம் ஆறு வயதுக்குட்பட்ட குழந்தைகளின் முழுமையான வளர்ச்சியினை மேம்படுத்தும் பொருட்டு திருப்பூர் மாவட்டத்தில் செயல்படும் 1472 குழந்தைகள் மையங்களில் சத்துமாவு, ஊட்டச்சத்துடன் கூடிய கலவை உணவு மற்றும் முன்பருவக் கல்வி போன்றவை வழங்கப்படுகின்றது. குறிப்பாக 2 வயது முதல் 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு குழந்தைகள் மையத்தில் முறைசாரா முன்பருவக் கல்வி செய்கைப் பாடல், கதை, விளையாட்டுக் கல்வி உபகரணங்கள் ஆகியவற்றின் மூலம் அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தில் குழந்தைகளின் உடல். மொழி, மனம், சமூகம் மற்றும் அறிவு வளர்ச்சிக்கு தேவையானவற்றை ஆடிப்பாடி விளையாடு பாப்பா எனும் சிறப்பு பாடத் திட்ட திருப்புதலுடன் 12 மாதங்களுக்கும் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

அந்த வகையில் இன்றைய தினம். திருப்பூர் மாவட்டம், குடிமங்கலம் ஊராட்சி ஒன்றியம், சோமவாரப்பட்டி அங்கன்வாடி மையத்தில் சோமவாரப்பட்டி, பெதம்பம்பட்டி1 மற்றும் 2 ஆகிய அங்கன்வாடி மையங்களில் பயிலும் 55 குழந்தைகளுக்கு ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப்பணிகள் திட்டத்தின் கீழ் வண்ணச்சீருடைகள் வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், திருப்பூர் மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் திரு.இல.பத்மநாபன் குழந்தை வளர்ச்சித்திட்ட அலுவலர் (குடிமங்கலம்) செல்வி கோ.வேளாங்கன்னி, (குண்டடம்) திருமதி தீபா மற்றும் துறை சாரந்த அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.

## வேலூரில், ரூட் கேப் டிராவல்ஸ், மக்களை ஈர்க்கும் வகையில் மற்ற டிராவல்சை மிஞ்சும் அளவில் புதிய முறை ஒன் வே சார்ஜ் மட்டும் சிறப்பு சலுகையில் ரூட் கேப்ஸ் அறிமுகம்

### Texve நிருவனத்தின் சார்பில், புதிய Car booking app அறிமுக விழா

வேலூர், ஜுன்.07

வேலூர் மாவட்டம், காட்பாடி தாலுகா, தாராபடவேடு, வேலூரில், ரூட் கேப் டிராவல்ஸ், மக்களை ஈர்க்கும் வகையில் மற்ற டிராவல்சை மிஞ்சும் அளவில் புதிய முறை ஒன் வே சார்ஜ் மட்டும் சிறப்பு சலுகையில் ரூட் கேப்ஸ் அலுவலகம் திறப்பு விழா Texve நிருவனத்தின் சார்பில், புதிய Car booking app அறிமுக விழா, நிறுவன தலைவர் செல்வரத்தினம் தலைமையில் குத்துவிளக்கேற்றி திறந்து வைக்கப்பட்டது.







இந்நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளர்களாக அணைக்கட்டு சட்டமன்ற உறுப்பினர், திமுக மாவட்ட செயலாளர் ஏ பி நந்தகுமார் மற்றும் டார்லிங் குழும நிறுவனத் தலைவரும், தமிழ்நாடு ஹோட்டல் உரிமையாளர்கள் சங்கத்தின் மாநில தலைவருமான எம்.வெங்கடசுப்பு ஆகியோர் கலந்து கொண்டு ரிப்பன் வெட்டி குத்துவிளக்கேற்றி திறந்து வைத்தனர். இந்நிகழ்ச்சியில் ரூட் கேப்ஸ் இயக்குனர்கள் கதிரவன், பாவனா, கிளவுட் டெஸ்க், ஐ.டி.ஆபிஸர் ஜெயக்குமார், பி ஆர் வா அலுவலர் ராம் மற்றும் அலுவலர்கள் பணியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்.

## வேலூரில், பாதாள சாக்கடையில் தவறி விழுந்த பசு மாட்டை லாவகமாக மீட்டெடுத்த தீயணைப்பு துறையினர் : பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் பாராட்டு

வேலூர். ஜுன்.07

வேலூர் மாவட்டம், வேலூர் கோட்டை சுற்றுச்சாலை, 4 மண்டலம், 33வது வார்டுக்கு உட்பட்ட நவநீதம்மன் கோவில் தெரு பகுதியில் பாதாள சாக்கடை திட்டப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது இப்பணிக்காக அவ்வப்போது ராட்சத குழிகள் தோண்டப்பட்டு மூடுவது வாடிக்கையாக நடந்து கொண்டிருக்கிறது. இந்நிலையில் 05/06/2025 இரவு தோன்றி மூடப்பட்ட இடத்தில் பசுமாடு பாதாள சாக்கடை புதைக் குழிக்குள் சிக்கிக்கொண்டுள்ளது. இதை அறிந்த அப்பகுதி மக்கள் பசுவை மீட்க முயற்சி செய்தனர். இப்பகுதி மக்களால் முடியாத நிலையில் தீயணைப்பு துறையினருக்கு தகவல் தெரி வித்தனர். சமூக ஆர்வலர்களின் பேரில் தகவலறிந்து வந்த தீயணைப்பு நிலைய (பொ) அலுவலர் முருகேசன், நிலைய மீட்பு பணியாளர்கள் பார்த்தீபன் உடனான தீயணைப்பு நிலைய குழுவினர், பாதாள குழியில் சிக்கித் தவித்த பசுமாட்டை லாவகமாக போராடி பசுவை மீட்டு உரிமையாளரிடம் ஒப்படைத்தனர். இதுகுறித்து இப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்ட நிலையில், தீயணைப்புத் துறையின் தீவிர முயற்சியில் பத்திரமாக மீட்கப்பட்டதை பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் பாராட்டி வருகின்றனர்.



## உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு தூய்மை இயக்கத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ் துவக்கி வைத்தார்

திருப்பூர், ஜூன்.7-

திருப்பூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.தா. கிறிஸ்துராஜ் இ.ஆ.ப., அவர்கள் திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவகப்பெருந்திட்ட வளாகத்தில் உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு தூய்மை இயக்கம் மூலம் மாவட்டம் முழுவதும் உள்ள அரசு அலுவகங்களில் கழிவுகள் சேகரித்து மறுசுழற்சி / மீள்பயன்பாடு மேற்கொள்ளும் மாபெரும் முன்னெடுப்பு இயக்கத்தினை துவக்கி வைத்தார்கள்.



தமிழ்நாடு அரசு எடுத்து வரும் பல முன்னெடுப்புகளில் தற்போது கழிவு மேலாண்மையில் ஒரு சிறப்பு முன்னெடுப்பாக தூய்மை இயக்கத்தினை தொடங்கி அதனை செயல்படுத்திட தூய்மை தமிழ்நாடு நிறுவனம் என்ற அமைப்பு செயல்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இந்நிறுவனத்தின் செயல்பாட்டின் முதற்கட்டமாக, உலக சுற்றுச்சூழல் தினமான இன்று மாநிலம் முழுவதும் 1,077 அரசு அலுவலகங்களை சுத்தம் செய்யும் நோக்கில் அவ்வலுவலக கழிவுகளை சேகரிக்கும் மாபெரும் முன்முயற்சி மேற்கொள்ளப்படுகிறது.

திருப்பூர் மாவட்டத்தில் உள்ள மாவட்ட ஆட்சியர் அலுவலகம், மாநகராட்சி, நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலகங்கள் ஆகிய இடங்களில் உள்ள பிளாஸ்டிக் கழிவுகள், மின்னணு கழிவுகள், உலோகக் கழிவுகள், காகித கழிவுகள், கண்ணாடி கழிவுகள், பயன்படுத்த இயலாத மரத் தளவாடங்கள் போன்ற பலவிதமான கழிவுகளைச் சேகரிக்கும் மாபெரும் நிகழ்வு மேற்கொள்ளப்படுகிறது. கழிவுகள் நிலப்பரப்பில் குவிக்கப்பட்டு சுற்றுச்சூழல் மாசுபடுவதை தவிர்க்கும் பொருட்டு இந்த முன்னெடுப்பில், சேகரிக்கப்பட்ட கழிவுகள் அனைத்தும் உயர் தொழில்நுட்பத்தின் மூலம் சுற்றுச்சூழல் விதிமுறைகளுக்கு உட்பட்டு மீள்பயன்பாடு மற்றும் மறுசுழற்சி செய்வதற்கான பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

அந்த வகையில், திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவகப்பெருந்திட்ட வளாகத்தில் தூய்மை இயக்கம் மூலம் மாவட்டம் முழுவதும் உள்ள அரசு அலுவகங்களில் கழிவுகள் சேகரித்து மறுசுழற்சி / மீள்பயன்பாடு மேற்கொள்ளும் மாபெரும் முன்னெடுப்பு இயக்கத்தினை துவக்கி வைக்கப்பட்டது. இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.தா. கிறிஸ்துராஜ் இ.ஆ.ப. அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஊரக வளர்;ச்சி முகமையின் திட்ட இயக்குநர் திருமதி கோ.மலர்விழி அவர்கள், உதவி திட்ட அலுவலர் (வீடுகள்) திரு.சரவணன் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள், பணியாளர்கள் கலந்து கொண்டார்கள்.



■ உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு மதுரை மாநகராட்சி அறிஞர் அண்ணா மாளிகையில் தூய்மை இயக்கத்தின் கீழ் மரக்கன்றுகளை மேயர் இந்திராணி பொன்வசந்த் , மாநகராட்சி ஆணையாளர் சித்ரா விஜயன், இ.ஆ.ப., ஆகியோர் நட்டு வைத்தார்கள் அருகில் மண்டலத் தலைவர் சரவணபுவனேஸ்வரி , பாண்டிச்செல்வி , துணை ஆணையாளர் ஜெய்னுலாபுதீன் , உதவிப்பொறியாளர் அமர்தீப் ஆகியோர் உடன் உள்ளனர்.





## 190 வது வட்ட திமுக சார்பில் முன்னாள் முதல்வர் கலைஞர் கருணாநிதி 102 வது பிறந்தநாளை முன்னிட்டு அன்னதானம்

பள்ளிக்கரணை, ஜூன்.07

சென்னை தெற்கு மாவட்ட கழகச் செயலாளர், மருத்துவ மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரமான, மா. சுப்பிரமணியன் மற்றும் சோழிங்கநல்லூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர், ச.அரவிந்த் ரமேஷ் ஆலோசனைப் படியும், சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட பள்ளிக்கரணையில் ஐஸ்வர்யா திருமண மண்டபத்தின் எதிரில் 190 வது வட்ட கழகச் செயலாளர், பி.ஆரோன் அரசு நிகழ்ச்சி ஏற்பாட்டில் முன்னாள் முதல்வர், டாக்டர். கலைஞர் கருணாநிதி அவர்களின் 102 வது பிறந்தநாள் விழா சிறப்பாக நடைபெற்றது. தொடர்ந்து திராவிட முன்னேற்றக் கழகக் கொடியை ஏற்றி டாக்டர் கலைஞர் கருணாநிதி திருவுருவப்படத்திற்கு மலர் தூவி மாலை அணிவித்து மரியாதை செலுத்தி பொது மக்களுக்கு இனிப்புகள் வழங்கி, கேக் வெட்டி, அருண்சுவை விருந்து பிரியாணி அனைவரும் வழங்கி, நீர்,மோர், கலர் குளிர்பானங்களும் வழங்கி பிறந்தநாள் விழாவை சிறப்பாக கொண்டாடினர். இந்நிகழ்ச்சியில் மாநில, மாவட்ட, பகுதி, ஒன்றிய, வட்ட கழக, ஊராட்சி மற்றும் அனைத்து அணிகளின் நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.



## காட்பாடி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் போதை பொருள் தடுப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி

### மாவட்ட ஆட்சியர் சுப்புலட்சுமி பங்கேற்று மாணவர்களுக்கு விழிப்புணர்வு குறித்து அறிவுரை வழங்கி உறுதிமொழி ஏற்பு

வேலூர், ஜூன்.07

வேலூர் மாவட்டம், காட்பாடி தாலுகா, காட்பாடி அரசினர் ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற போதை பொருட்கள் பயன்பாடு

தடுப்பது குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சியில் வேலூர் மாவட்ட ஆட்சியர் சுப்புலெட்சுமி தலைமையில் (06.06.2025) பள்ளி மாணவர்கள் போதை பொருட்களுக்கு எதிரான உறுதிமொழியை ஏற்றுக்கொண்டனர். இந்நிகழ்ச்சியில் முதன்மை கல்வி அலுவலர் (பொ) தயாளன், மனநல மருத்துவர் மரு.சிவாஜி. போதைப்பொருள் தடுப்பு பிரிவு சார் ஆய்வாளர் சீனிவாசன், விழிப்புணர்வு கண்காணிப்பு பார்வையாளர் சிவக்குமார், பள்ளி தலைமையாசிரியர் தாரகேஸ்வரி, உதவி தலைமை ஆசிரியர் ரமேஷ், ஆசிரியர் பாபு மற்றும் ஆசிரிய பெருமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



■ செங்கல்பட்டு மாவட்டம் அகரம் தென் மப்பேடு பகுதியில் தமிழக வெற்றி கழக தலைவர் தளபதி அவர்களின் நல்லாசியுடன் மாநில பொதுசெயலாளர் என் ஆனந்த் அவர்களின் உத்தரவுபடி செங்கல்பட்டு மாவட்டம் செயற்குழு உறுப்பினர் எம்.எஸ்.பாலாஜி அவர்களின் அறிவுறுத்தலின்படி செங்கல்பட்டு மாவட்ட இளைஞர் அணி தலைமை நிர்வாகி மண்ணிவாக்கம் தளபதி தம்பி எஸ்.பி.கௌதம் தலைமையில் நெடுங்குன்றம் மப்பேடு பகுதியில் வாழ்வாதாரத்தில் இருந்து தவிக்கும் ரேகா மற்றும் தேவன்பு ஆகியோர் மகள் படிப்பிற்காக ரூபாய் 15,000 ரொக்கமாக மண்ணிவாக்கம் வி.ஆனந்த், 8வது வார்டு நிர்வாகி காட்டாங்கொளத்தூர் வடக்கு ஒன்றியம் மண்ணிவாக்கம் முதல்நிலை ஊராட்சி அவர்களின் ஏற்பாடில் வழங்கபட்டது உடன் வழக்கறிஞர் மண்ணிவாக்கம் பத்மநாபன் மற்றும் நிர்வாகிகள் பிரசாந்த், சக்திவேல் உடன் இருந்தனர்

## திருச்சிராப்பள்ளி ஒத்தக்கடை பகுதியில் அமைந்துள்ள நூலகம் மற்றும் அறிவு சார் மையத்தை நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு திடீர் ஆய்வு

திருச்சி. ஜூன்.07

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி மண்டலம் எண் 4, வார்டு எண் 53, குதுப்பப்பள்ளம் பகுதியில் நூலகம் மற்றும் அறிவு சார் மையத்தில் சுமார் 200 மாணவர் மாணவர்கள் அரசு போட்டி தேர்வுக்கு பயின்று வருகிறார்கள்.

இம்மையத்தை நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே. என். நேரு தீடீர் ஆய்வு மேற்கொண்டு அவர்களின் மாணவ, மாணவிகளின் வருகை பதிவேடு ஆய்வு செய்து எந்தெந்த பகுதியில் இருந்து வருகிறார் என்று கேட்டறிந்தார் மாணவ, மாணவிகள் மற்றும் அறிவு சார் மையத்திற்கு தேவைகள் மற்றும் குறைகளை கேட்டறிந்தார்.

மேலும் அங்கு பயின்று வரும் மாணவ மாணவிகளுக்கு வாழ்த்துக்களை தெரிவித்தார்.

இந்த ஆய்வின் போது மேயர் மு. அன்பழகன் , மாநகராட்சி ஆணையர் சரவணன் ,நகரப் பொறியாளர் சிவபாதம்,மண்டல தலைவர் துர்கா தேவி ,உதவி ஆணையர் சண்முகம்,மாமன்ற உறுப்பினர் கலைச்செல்வி, முத்துசெல்வம், புஷ்பராஜ், ராமதாஸ் மற்றும் அரசு அலுவலர்கள் உடன் இருந்தனர்..





■ திருச்சி மாவட்டம், கொள்ளிடம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் கொள்ளை சம்பவத்தில் ஈடுபட்ட குற்றவாளிகளை பிடித்த காவல் சிறப்பு உதவி ஆய்வாளர், தலைமை காவலர் மற்றும் முதல்நிலை காவலர் ஆகியோரின் சிறப்பான பணியினை பாராட்டி திருச்சி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் செ.செல்வநாகரத்தினம், நற்பணி சான்றிதழ் வழங்கினார்.





## இனாம்குளத்தூரில் ரயில்வே தண்டவாளத்திற்கு அடியில் கேபிள் மூலம் மின்விநியோகம் வழங்கிட நிதி ஒதுக்கப்பட்டது

திருச்சிராப்பள்ளி. ஜூன்.07

திருச்சி மாவட்டம், மணிகண்டம் ஒன்றியம், இனாம்குளத்தூர் மக்களின் 7 வருட மின்வாரிய கோரிக்கை, திருச்சி நாடாளுமன்ற உறுப்பினர் துரை வைகோ தொடர் முயற்சி காரணமாக நிறைவேறியுள்ளது.

திருச்சி நாடாளுமன்றத் தொகுதி, திருவரங்கம் வட்டம், மணிகண்டம் ஒன்றியம், இனாம்குளத்தூரில் ரயில்வே கோரிக்கை மனு ஆய்விற்காக திருச்சி எம்.பி. துரை வைகோ

அப்போது, பொதுமக்களின் ரயில்வே மேம்பாலக் கோரிக்கைக்கான இடத்தை ஆய்வு செய்துவிட்டு வரும்போது, பொதுமக்கள் தரப்பிலிருந்து பல்வேறு கோரிக்கை மனுக்களை அவரிடம் வழங்கினார்கள்.

அதில், இனாம்குளத்தூர் பெரிய பாசன ஏரி பெரிய சிறு மற்றும் குறு விவசாயிகள் பயனீட்டாளர்கள் சங்கத்தினர் தலைவர் எம்.ஆசாப் அலி தலைமையில் ஒரு கோரிக்கை மனு அளித்தனர்.

அதில், அம்மாபேட்டை துணை மின் நிலையத்தில் இருந்து ரயில்வே கேட் அடுத்துள்ள ரஹமத்நகர், அண்ணாநகர், புதுக்குளம், கடப்பட்டி, ராஜாகாட்டுப்பட்டி ஆகிய பகுதிகளுக்கு ரயில்வே தண்டவாளங்களுக்கு அடியில் கேபிள் மூலமாக மின் விநியோகம் இருந்து வந்தது.

2018ஆம் ஆண்டு பெரும் சீற்றத்துடன் வீசிய கஜா புயலின் போது, கேபிள் வழியாக சென்ற மின் விநியோகம் பாதிப்புக்குள்ளானது. அப்போது, புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை துணை மின் நிலையத்தில் இருந்து இடைக்கால ஏற்பாடாக மின்சாரம் வழங்கப்பட்டது.

அது இன்றளவும் தொடர்கிறது. ஆனால் இப்பகுதியில் அடிக்கடி மின்தடை ஏற்படுகிறது. இதனால், மருத்துவமனை, பள்ளி செயல்பாடுகள் பாதிப்படைகிறது. வணிகர்கள், பொதுமக்கள் பெரிதும் பாதிப்படைகின்றனர்.

எனவே, பழைய நடைமுறையின்படி, அம்மாபேட்டை துணை மின் நிலையத்தில் இருந்து, ரயில்வே தண்டவாளங்களுக்கு அடியில் கேபிள் வழியாக மின்விநியோகம் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு அம்மனுவில் குறிப்பிட்டிருந்தனர்.

இந்த மனு குறித்து மின்வாரிய அதிகாரிகளிடம் பேசுமாறு, மறுமலர்ச்சி திமுக திருச்சி தெற்கு மாவட்டச் செயலாளர் மணவை தமிழ்மாணிக்கம் அவர்களுக்கு எம்.பி. துரை வைகோ பணித்தார்.

இதனைத் தொடர்ந்து அவரும், மின்வாரிய அதிகாரிகளின் பார்வைக்கு எடுத்துச் சென்றார். அடிக்கடி நினைவும்படுத்தினார்.

இதனிடையே, மனுதாரர்களின் கோரிக்கை மூன்று மாதமாகியும் தீர்க்கப்படாததை அறிந்த எம்.பி.துரை வைகோ மின்வாரிய அதிகாரிகளுக்கு போதிய அழுத்தம் கொடுக்க அறிவுறுத்தினார்.

எம்.பி.துரை வைகோ மாவட்டச் செயலாளர் மணவை தமிழ்மாணிக்கம் அவர்களும், மணிகண்டம் தெற்கு ஒன்றியச் செயலாளர் ஆராக்கிய ரெக்ஸ் தன்ராஜ் விவசாய அமைப்பினர் தந்த மனுவை எடுத்துக் கொண்டு, 07.04.2025 அன்று திருச்சி மன்னார்புரத்தில் உள்ள திருச்சி பெருநகர மின்வாரிய மேற்பார்வைப் பொறியாளர் செல்வி மற்றும் தலைமையிடத்து செயற்பொறியாளர் கணேசன் அவர்களைச் சந்தித்து, இப்பிரச்சனைக்கு உடனடித்தீர்வு காணவேண்டும் என எம்.பி.துரை வைகோ அனுப்பியதாகத் தெரிவித்தனர்.

இந்நிலையில், மேற்பார்வைப் பொறியாளர் செல்வி, செயற்பொறியாளர் கணேசன் மற்றும் உதவிப் பொறியாளர் (கிராமியம்) அசோக்குமார் உள்ளிட்ட மின்வாரிய அதிகாரிகள் 08.04.2025 அன்று இனாம்குளத்தூர் வந்தனர். ரயில்வே தண்டவாளம் வழியாகச் சென்ற பழைய கேபிள் மின் விநியோகப் பாதையை ஆய்வு செய்தனர்.

அதன்பின்பு மாவட்டச் செயலாளர் மணவை தமிழ்மாணிக்கம், ஒன்றியச் செயலாளர் ஆரோக்கிய ரெக்ஸ் தனராஜ், சி.பி.எம். ஒன்றியச் செயலாளர் பொன்.வேலுச்சாமி, விவசாய சங்க நிர்வாகிகள் எம்.ஆசாப் அலி, முகமது தாஜிதீன், அக்பர் அலி, முகமது பைசல்கான் ஆகியோரிடம் மின்வாரிய உயர் அதிகாரிகள் ஆலோசனை மேற்கொண்டனர்.

ஆலோசனையின் முடிவில் மின்வாரிய மேற்பார்வைப் பொறியாளர் செல்வி , பழைய நடைமுறையின்படி கேபிள் மூலம் மின்சாரம் வழங்கிட திட்ட மதிப்பீடு செய்து, மதுரை கோட்ட ரயில்வே துறையிடம் அனுமதி பெற்று, விரைந்து பணியை முடித்துத் தருவதாக உறுதியளித்தார். இந்த செய்தியை அவ்விடத்தில் இருந்தவாறே திருச்சி எம்.பி. துரை வைகோ அவர்களிடம் மாவட்டச் செயலாளர் தெரிவித்தார்.

இதனிடையே, 22.04.2025 அன்று மீண்டும் எம்.பி. துரை வைகோ அவர்கள், ரயில்வே மேம்பாலப் பணிகள் மற்றும் மின்வாரியப் பணி ஆய்விற்காக இனாம்குளத்தூர் வந்தார். அப்போது, திரளான மக்கள் எம்.பி. அவர்களைச் சந்தித்து பேசினார்கள். இந்தச் சந்தர்ப்பத்தில் மின்வாரிய கோரிக்கை தொடர்பாக எம்.பி. துரை வைகோ , திருச்சி மாவட்ட மின்வாரிய மேற்பார்வைப் பொறியாளர் செல்வி அவர்களிடம் தொலைபேசியில் பேசினார்.

பழைய நடைமுறையின்படி கேபிள் மூலம் மின்சாரம் வழங்கிட திட்டமதிப்பீடு செய்து உயர் அதிகாரிகளின் பார்வைக்கு அனுப்பி இருப்பதாகவும், எப்படியும் ஒரு மாத காலத்தில் நிதி ஒதுக்கும் பணிகள் முடியும். அதன்பிறகு ரயில்வே துறையிடம் அனுமதி பெற்று பணிகள் துவங்குவோம் என்றார். அதற்கு எம்.பி. துரை வைகோ , எந்த இடத்தில் உங்களுக்கு தாமதம் என்றாலும் சொல்லுங்கள், உங்களுக்கு உதவியாக நான் அழுத்தம் தருகிறேன். குறிப்பாக ரயில்வே துறைக்கு மின்வாரியம் சார்பில் கடிதம் கொடுத்துவிட்டு என்னிடம் கூறுங்கள், நான் மதுரை ரயில்வே கோட்ட மேலாளரிடம் பேசி உடனடி அனுமதி பெற்றுத்தருகிறேன் என்றார்.

இந்த விபரங்கள் அனைத்தையும் அங்கு கூடியிருந்த மக்களிடம் எம்.பி. துரை வைகோ தெரிவித்தார். 7 வருட கோரிக்கைக்காக, சில மாதங்கள் பொறுத்திருங்கள். உங்கள் கோரிக்கையை அவசியம் நிறைவேற்றும் வரை நான் ஓயமாட்டேன் என உறுதியளித்துப் பேசினார் எம்.பி. துரை வைகோ.

இதனைத் தொடர்ந்து இனாம்குளத்தூர் மக்களின் கோரிக்கையை செயல்படுத்தும் விதத்தில், ரயில்வே தண்டவாளம் அடியில் கேபிள் மூலம் மின்சாரம் வழங்கிட ரூ.24,92,270/ (24 இலட்சம் 92 ஆயிரத்து 270) ஒதுக்கி திருச்சி மண்டல தலைமைப் பொறியாளர் கீதா 03.05.2025 (அன்று) ஆணை பிறப்பித்துள்ளார். இதுகுறித்து திருச்சி மாவட்ட மின்வாரிய மேற்பார்வைப் பொறியாளர் செல்வி அவர்கள் கூறும்போது, மின்வாரியம் தரப்பில் நிதி ஒதுக்கீடு செய்துவிட்டோம். மதுரை கோட்ட ரயில்வே நிர்வாகத்திற்கு அனுமதி கோரி கடிதம் எழுதுவோம். அவர்களின் அனுமதி கிடைத்த பின்பு பணிகளை துவங்குவோம் என்றார்.

இந்தக் கோரிக்கையை விரைந்து செயல்படுத்திட பலகட்ட தொடர் முயற்சி மேற்கொண்ட திருச்சி நாடாளுமன்ற உறுப்பினர் .துரை வைகோ அவர்களுக்கும், தமிழ்நாடு அரசின் மின்வாரிய அதிகாரிகள் அனைவருக்கும் திருச்சி தெற்கு மாவட்ட மறுமலர்ச்சி திமுக சார்பில் நெஞ் சார்ந்த நன்றியை தெரிவித்தார்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161